

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.5.2025) தலைமைச் செயலகத்தில் அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பின் தலைவர் கல்யாண் சௌபே மற்றும் துணைத் தலைவர் என்.எ.ஹரிஸ் ஆகியோர் சந்தித்து தமிழ்நாட்டில் கால்பந்து விளையாட்டினை இளைஞர்களிடம் அதிக அளவில் கொண்டு செல்வது குறித்து கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# புதுச்சேரி அரசு பள்ளி மாணவர்களின் தோல்வி எதிரொலி!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா கண்டன அறிக்கை!



புதுச்சேரி, மே 29 -

புதுச்சேரி அரசு பள்ளிகளில் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தை அவசரகதியில் அமல்படுத்தியதன் விளைவாக, 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் ஆயிரக்கணக்கில் தோல்வியடைந்துள்ளனர். இந்த தோல்வி, புதுச்சேரி அரசின் கல்விக் கொள்கையின் தோல்வியை தெளிவாக உணர்த்துகிறது. மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு பதிலாக, அவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் இந்த முடிவு, அரசின் கவனக்குறைவையும், திட்டமிடப்படாத அணுகுமுறையையும் பறைசாற்றுகிறது.

சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன், ஆசிரியர்களுக்கு போதுமான பயிற்சியோ, மாணவர்களுக்கு உரிய வழிகாட்டுதலோ வழங்கப்படவில்லை. இதன் விளைவாக, மாணவர்கள் கடுமையான உளவியல் மற்றும் பொருளாதார பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர். இந்த அவலநிலைக்கு புதுச்சேரி அரசு முழு பொறுப்பேற்க வேண்டும் என வன்மையாக கண்டிக்கிறேன்.

புதுச்சேரி சி.பி.எஸ்.இ. படிக்கும் அரசு பள்ளி மாணவர்கள், தங்கள் விடைத்தாள் களின் நகல் பெறுவதற்கு ஒரு பாடத்திற்கு ரூ.500/ செலுத்த வேண்டியுள்ளது,

மேலும் ஒரு கேள்விக்கு மறுமதிப்பீடு செய்ய ரூ.100/ செலவாகிறது. இதுவே, தமிழ்நாடு மாநில சமச்சீர் பாடத்திட்டத்தில் விடைத்தாள் நகல் பெறுவதற்கு செலவாகும் தொகை வெறும் ரூ.275/ இதனுடன் ஒப்பிடுகையில் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் நகலை பெறுவதற்கு இரு மடங்கு செலவாகிறது. பொருளாதார ரீதியாக பின்தங்கிய பல அரசு பள்ளி மாணவர்களின் குடும்பங்களுக்கு இந்தக் கட்டணங்கள் , மாத இறுதிக்கட்டதிலும் கல்வியாண்டின் துவக்கத்திலும் கடுமையான நிதிச்சுமையும் குழப்பத்தை யும் ஏற்படுத்துவதாக உள்ளது. விடைத்தாள்கள் முறையாக திருத்தப்பட்டனவா என்பதை அறியவே இத்தகைய செலவுகளை மாணவர்கள் சுமக்க வேண்டியிருப்பது அநீதியாகும். இந்த பொருளாதார பாதிப்பு, மாணவர்களின் கல்வி முன்னேற்ற த்திற்கு தடையாக அமைந்து, அவர்களின் உளவியல் நலனையும் பாதிக்கிறது. இத்தகைய நடைமுறைகளை அரசு உடனடியாக மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தின் காரணமாக ஏற்பட்ட தோல்விகள், மாணவர்களிடையே கல்வி இடைநிற்றலை அதிகரிக்கும் அபாயத்தையும் உருவாக்கியுள்ளன. பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்கள், தோல் வியின் உளவியல் தாக்கத்தையும், மறுதேர்வு மற்றும் மறுமதிப்பீட்டிற்கான செலவுகளையும் தாங்க முடியாமல், கல்வியை கைவிடும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இது, சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக அமைகிறது. அரசு பள்ளி மாணவர்களின் கல்வி உரிமையை பறிக்கும் இத்தகைய குறைபாடு களை உடனடியாக சரிசெய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தோல்வியுற்ற புதுச்சேரி அரசு பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டுதல் இல்லாமை வருத்தமளிக்கிறது. தோல்விய டைந்த மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டும் பயிற்சிகளோ, மறு தேர்விற்கு உரிய வழிகாட்டுதலோ முறையாக வழங்கப்படவில்லை. அரசு பள்ளி மாணவர்கள், பெரும்பாலும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பின்னணி யைச் சேர்ந்தவர்கள் என்பதால், இத்தகைய ஆதரவு அவர்களுக்கு மிகவும் அவசியமாகும். ஆனால், புதுச்சேரி அரசு இதில் முழுமையாக தோல்வியடைந்துள்ளது. மாணவர்களின் தோல்விக்கு பாடத்திட்ட மாற்றமும், ஆசிரியர்களுக்கு போதுமான பயிற்சி இல்லாமையும் முக்கிய காரணங்களாக உள்ளன. பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்கள் மறு தேர்வு செலவுகளால் மேலும் பாதிக்கப்படுகின்றனர். இதனை மறைக்காமல் மறுக்காமல் மறுதேர்விற்கும் மறு கூட்டலுக்கும் தேவையான பொருளாதார உதவிகளை புதுச்சேரி அரசு தாமாகவே முன் வந்து முழு செலவுகளை யும் செய்ய வேண்டும்.

புதுச்சேரி ஆட்சியாளர்களின் தவறான கல்விக் கொள்கைகள் மற்றும் அணுமுறைகளால் நமது இளைஞர்களின் எதிர்காலம் பாதிக்கக் கூடாது. அவசரமாக அமல்படுத்தப்பட்ட சிபிஎஸ்இ பாடத் திட்டம் மாணவர்களின் கல்வி முன்னேற்ற த்திற்குத் தடையாக உள்ளது என்பதை உணர்ந்து உடனடியாக தீர்வை நோக்கி பயணிக்க வேண்டும். இத்தகைய பல தோல்விகளுக்குப் பிறகு, அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து முழு வெளிப்படைத் தன்மையுடன் புதுச்சேரி மக்களுக்கு உரிய தகவல்களை வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரை எந்தவொரு தெளிவான அறிக்கையையும் கல்வித்துறை வெளியிடவில்லை. நமது இளைய தலைமுறையின் கல்வி உரிமையைப் பாதுகாக்க புதுச்சேரி அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், மதியனூர் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாமினை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேற்று (28.05.2025) தொடங்கி வைத்து, முகாமில் துறை சார்ந்த கோரிக்கை மனுக்களை பதிவு செய்யும் இடங்களை பார்வையிட்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், மாவட்ட வருவாய் அலுவலர், திருக்கோவிலூர் கோட்டாட்சியர், உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் மற்றும் திருநாவலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.ஆர்.வசந்தவேல் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### என்.கௌதமன் தலைமை! பி.என்.கார்த்தி வரவேற்புரை!

# நாகை மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம்!

## என்.இளையராஜா , மதுரைபாலா, விக்னேஷ்ஆனந்த் சிறப்புரை!

நாகை, மே 29-

நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் நாகையில் தளபதி அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ். அசோக், எஸ்.டேனியல்சத்தியா, கே.சுரேஷ்குமார், ஜி.தாமேதரன், பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி. என்.கார்த்தி வரவேற்றார். கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாரும், தாட்கோ தலைவர் என்.இளையராஜா, தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் மதுரைபாலா, சமுக வளைத்தள பயிற்சியாளர் விக்னேஷ்ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள் .

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாவ ட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர் மணி வண்ணன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ. தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார். கே.பழனியப்பன், செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், என்.சதாசிவம், சோ.பா.மலர்வண்ணன், க.பழனியப்பன், நகரக் கழகச் செயலளார்கள் இரா. மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கோசி. குமார், உமாசெந்தாமரை செல்வன், பேரூர் கழகச் செயலாளர்கள் மரியசார்லஸ், முகமது சுல்தான், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சம்பத், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.கலையாரசன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கு சமூக வலைதள பயிற்சி வழங்கப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

சட்டமன்ற வரலாற்றில் அதிக முறை சட்ட மன்ற உறுப்பினராக நின்ற அனைத்துத் தேர்தலிலும் வென்ற, 5 முறை முதல்வராக இருந்து தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி, கல்வி தரத்தை உயத்தி, வேலை வாய்பை உருவாக்கி தமிழகத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டு சென்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜுன் 3ம் தேதி நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதியிலும் கழக இளைஞர் அணியினர் தாய் கழகத்தோடு இணைந்து கலைஞர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை செம்மொழி நாளாக அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட இளைஞர் அணி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், கழக இளைஞர் அணிக்கு கிளைகள், வார்டுகள் தோறும் இளைஞர் அணி நிர்வாகிகளை, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர் தேர்வு செய்து அதன் பட்டியலை கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் ஒப்படைக்க உடன் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைத்திட வேண்டும் என்றும், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என். இளையராஜாவுக்கு தாட்கோ தலைவராக நியமனம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட இளைஞர் அணி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.



பண்ருட்டி நகர கழக செயல்வீரர்கள் கூட்டம், தட்டாஞ்சாவடி, நகர கழக அலுவலகத்தில், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழக அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர் ஆனந்தி சரவணன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஜி.கதிர்காமன், நகர பொருளாளர் ஆர்.கே.ராமலிங்கம்,நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணி சந்தர், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராம்குமார், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் சங்கர், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் மகாலிங்கம் உள்ளிட்ட நகர, வார்டு, கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி





மே 29

கழக துணை பொதுச்செயலாளரும், முன்னாள் மத்திய அமைச்சரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான

மாண்புமிகு. ஆ.இராசா B.Sc.,ML,MP அவர்களின் மனைவி

**அ. பரமேஸ்வரி.** அவர்களின்

நீங்கா நினைவுகளுடன்

மாண்புமிகு. **V.செந்தில்பாலாஜி** முன்னாள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் தெற்கு மண்டல பொறுப்பாளர்

**தொ.அ.ரவி** கோவை வடக்கு மாவட்ட செயலாளர்

**C.R.இராமச்சந்திரன்** Ex.MLA மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச்செயலாளர்

**பா.அருண்குமார்** மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச்செயலாளர்

**T.R.சண்முகசுந்தரம்** தலைமை செயற்குழு உறுப்பினர்

**அ.அசரப் அலி** B.A.,B.L., தலைமை செயற்குழு உறுப்பினர்

**அ.அறிவரசு** B.E.,B.L., நகர கழக செயலாளர் - கூடலூர்

**MAR.K.ஹக்கீம்** B.E., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்

**SMT.கல்யாணசுந்தரம்** காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர்

**S.சுரேந்திரன்** காரமடை மேற்கு ஒன்றிய செயலாளர்

**ப.முனுசாமி** B.A.,B.L., நகர கழக செயலாளர் - தெற்கு

**மு.முகமது யூனூஸ்** நகர கழக செயலாளர் - வடக்கு

**R.வெங்கடேஷ்** நகர கழக செயலாளர் - காரமடை

**M.R.உதயகுமார்** நகர கழக செயலாளர் - சிறுமுகை

**R.S.நவீன்குமார்** MC பொதுக்குழு உறுப்பினர்

**K.குருபிரசாத்** MC பொதுக்குழு உறுப்பினர்

வழக்கறிஞர். **S.சபிக்** B.Com.,BL மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்

**S.ரமேஷ்குமார்** மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்

**A.அப்பாஸ்** 5 வது வார்டு கிளை செயலாளர்

**S.யுவராஜ்**

**V.ராஜேஷ்** B.Com.,

**K.தட்சிணாமூர்த்தி**


வழக்கறிஞர். **K.சந்தானகுமார்** B.A.,LLB.,

கோவை வடக்கு மாவட்டம்


# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே. மன்னப்பன்

## மே 29 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

நெருக்கடி காலத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தபோதும் கழகத்தின்மீது உறுதியாக பற்றுடன் திகழ்ந்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.